2. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் விவர அறிக்கை.

* திரு எஸ். இராகவானந்தம்: மாற்றுத் தலைவர் அவர்களே, 28-2-1978 அன்று வினா எண் 217 (124) தொடர்பாக விடையளிக்கப்பட்டபோது, திரு வாளர்கள் ஆ. பாலசுப்ரமணியம் மற்றும் திரு. வி. ஆர். பெரியண்ணன், எம்.எல்.சி., அவர்கள் எழுப்பிய துணை வினாக்களுக்கு விடை அளிக்கையில் நான் "சேந்தமங்கலம் திட்டம் அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக் கிறது, ஒப்புதல் கிடைத்தவுடன் மேற்கொள்ளப்படும்" என்றும், "நாமகிரிப் பேட்டைத் திட்டம் ரூ. 54,000 செலவில் நிறைவேற்றப்படுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கொண்டு தேவைப்படும் வேலைகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டவுடன் இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படும். இந்தத் திட்டம் பற்றி இன்வெஸ்டி கேஷன் முடிந்து விட்டது. அரசாங்கத்தினுடைய அப்ரூவலும் கிடைத் திருக்கிறது. எனவே, இனிமேல், வேலை துவங்கப்படும்" என்றும் கூறினேன். ஆனால் பின்பு கோப்பினை விரிவாக ஆராய்ந்ததில் மேற்படி விடையைக் கீழ்க் கண்டவாறு திருத்திக் கொள்ள விழைகிறேன்—

சேந்தமங்கலம் திட்டம்:—இது குடிநீர் வடிகால் வாரியத்தால் அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்படும். ஒப்புதல் கிடைத்தவுடன் மேற்கொள்ளப் படும்.

நாமகிரிப்பேட்டைத் திட்டம்.—இந்தத் திட்டம் ரூ. 54,000 செலவில் நிறைவேற்றப்படுவதற்கு குடிநீர் வடிகால் வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கொண்டு தேவைப்படும் வேலைகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டவுடன் இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப் படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

3. அரசின் தீர்மானங்கள்.

(1) உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு க. இராசா முகமது: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156-வது விதியின்படி 1978-79 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர் களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை, மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கக்கூடிய நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்"
என்று முன்மொழிகிறேன்.